
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1081

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

46



# ஆன்மிகம் முதல் அன்றாட வாழ்க்கை வரை துணை நிற்கும் கழகம்!

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

உலகில் பல நூறுகோடி மக்களின் ஆன்மிக உணர்வுகளோடு பின்னிப்பிணைந்த ஒரு நகரம் ஜெருசலேம். மிகப் பழமையான நகரம். யூதம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் ஆகிய மூன்று மதங்களின் நம்பிக்கைகள் சங்கமிக்கும் புள்ளி. அதனாலேயே **‘ஆபிரகாமிய மதங்களின் இதயம்’** என்றும் அழைக்கப்படுகிறது.

குறிப்பாக, யூதர்களுக்கு கி.மு. 1,000 முதல் இறைவனின் இருப்பிடமாக ஜெருசலேம் திகழ்கிறது. அங்குள்ள மேற்குச்சுவரில் அழுது பிரார்த்தனை செய்வது, இன்றும் வாடிக்கையான ஒன்று. அதேபோல, இயேசு தன் வாழ்வின் இறுதிக்காலத்தில் இங்குள்ள ஆலயங்களில் போதித்தார் என்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கை.

இயேசு கைது செய்யப்பட்ட ‘கெத்செமனே தோட்டம்’, அவர் சிலுவையைச் சுமந்து சென்ற ‘துயரப் பாதை’ ஆகியவை இங்குதான் உள்ளன. அவர் அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த இடமாகக் கருதப்படும் இடத்தில் ‘திருக்கல்லறை தேவாலயம்’ அமைந்துள்ளது. அதுபோலவே இஸ்லாமியர்களுக்கும் உலகின் ஜெருசலேம் (அல்-குட்ஸ்) மூன்றாவது புனித நகரமாகும்.

ஆரம்ப காலத்தில் முஸ்லிம்கள் மெக்காவிற்குப் பதிலாக ஜெருசலேமை நோக்கியே தொழுது வந்தனர். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மெக்காவிலிருந்து ஒரே இரவில் ஜெருசலேமுக்கு (மஸ்ஜிதுல் அக்ஸா) அழைத்து வரப்பட்டு, அங்கிருந்து விண்ணுலகப் பயணம் (மீராஜ்) சென்றதாகக் குர்ஆன் கூறுகிறது. இப்ராஹீம், தாவூத், சுலைமான் மற்றும் ஈஸா போன்ற பல இறைத்தூதர்கள் வாழ்ந்த புனித பூமியாக இது போற்றப்படுகிறது.

இக்காரணங்களால்தான் ஜெருசலேம் உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான மக்களின் ஆன்மிக உணர்வுகளுடன் பின்னிப் பிணைந்துள்ளது. இந்த ஆன்மிகத் தலங்கள் அனைத்தும் பழைய ஜெருசலேம் நகரின் ஒரு சதுர கிலோமீட்டர் பரப்பளவிற்குள்ளேயே அமைந்துள்ளன.

## ஜெருசலேம் செல்ல உதவி!

இஸ்லாமியர்களின் மதக்கடமையை நிறைவேற்ற மெக்காவிற்குச் செல்ல அரசு நிதி உதவி அளிப்பதைப் போலவே, ஜெருசலேம் செல்வதை வாழ்நாள் கனவாகக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் தமிழ்நாடு அரசு நிதியுதவி அளித்து வருகிறது. கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் செல்லும் வகையில் புனித பயணத் திட்டமும் தமிழ் நாட்டில் செயல்படுத்தப்படுகிறது. முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் 20,000 ரூபாயாக இருந்த இத்தொகையை திராவிட மாடல் அரசு 60,000 ரூபாயாக உயர்த்தியுள்ளது. 500 கிறிஸ்தவர்கள், 50 கன்னியாஸ்திரிகளுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்ட இந்த உதவித்தொகையை 550 கிறிஸ்தவர்கள் + 50 கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகள் என உயர்த்தியுள்ளது திராவிட மாடல் அரசு. கன்னியாஸ்திரிகள்/ அருட்சகோதரிகளுக்கு 60,000 ரூபாயும், 550 பிற கிறிஸ்தவர்களுக்குத் தலா 37,000 ரூபாயும் ஜெருசலேம் பயண மானியமாக வழங்கப்படுகிறது.




தமிழ்நாட்டைச் சார்ந்த அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய கிறிஸ்தவர்களுக்கு ECS முறையில் நேரடியாக மானியம் வழங்கப்படுகிறது. மெக்காவுக்குச் செல்வதற்கு வழங்கப்படும் மானியத்தைப் போலல்லாமல், ஜெருசலேம் சென்று வந்த பிறகு, அதற்குரிய ஆவணங்களை வழங்கி, மானியத்தொகையைப் பெற்றுக்கொள்ளும் வகையில், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்கான விண்ணப்பப் படிவங்கள் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதளத்தில் படிவங்களைப் பதிவிறக்கம் செய்து, மானியம் பெறும் வகையில் இத்திட்டம் எளிமையாகச் செயல்படுத்தப்படுகிறது.

## பிற மதத்தினருக்கும் உதவி

இஸ்லாம், கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி, தமிழ்நாடு அரசு பல்வேறு மதத்தினரும் தங்களது புனித தலங்களுக்கு ஆன்மிகப் பயணம் மேற்கொள்ளும் வகையில், பல்வேறு நிதியுதவித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, புத்த, சமண, சீக்கிய மதத்தினர் இந்தியாவுக்குள் அவரவர் மத புனிதத் தலங்களான புத்த கயா, அமிர்தசரஸ் செல்ல நபர் ஒருவருக்கு 10,000 ரூபாய் மானியமாக வழங்குகிறது. இதன்மூலம் ஆண்டுதோறும் 50 புத்த மதத்தினர், 50 சமணர்கள், 20 சீக்கியர்கள் என 120 பேர் பயன்பெற்று வருகிறார்கள். சிறுபான்மையினருக்கு மட்டும்தான் இந்த சலுகைகளா என்றால், நிச்சயம் இல்லை. இந்துக்களுக்கு ராமேஸ்வரம் முதல் காசி வரை இலவச ஆன்மிகப் பயணத் திட்டமும் நடைமுறையில் உள்ளது. இந்து சமய அறநிலையத்துறை மூலம் ராமேஸ்வரத்தில் தொடங்கி காசி விஸ்வநாதர் கோயில் வரை 10 நாள் இலவச ரயில் பயணத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதும் நினைவில்கொள்ள வேண்டியது.

## சிறுபான்மையினருக்கான பிற உதவிகள்!

சிறுபான்மை மதத்தினருக்கான ஆன்மிகப் பயணங்களைப் போலவே, அவர்களின் வாழ்வியல் பயணத்திற்கும் எண்ணற்ற முன்னெடுப்புகளை, திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த காலங்களிலும், தற்போதும் முன்னெடுத்து வருகிறது. மசூதிகள் மற்றும் தர்காக்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு மிதிவண்டிகள், தையல் இயந்திரங்கள் மற்றும் இதர சமூக பாதுகாப்பு நலத்திட்டங்கள் (ஓய்வூதியம், திருமண நிதியுதவி) வழங்குவதற்கான உலமாக்கள் மற்றும் பணியாளர்கள், நல வாரியம், ஆதரவற்ற பெண்களுக்கு வாழ்வாதார உதவிகள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குவதற்கான முஸ்லிம் மகளிர் மேம்பாட்டுச் சங்கம், 1-ஆம் வகுப்பு முதல் ஆராய்ச்சிப் படிப்பு வரை சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்குப் பல்வேறு கல்வி நிதி வழங்குவதற்கான கல்வி உதவித்தொகை திட்டம், சிறுபான்மையினர் தொழில் தொடங்க கடன் வழங்குவதற்கான ‘சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்’ என எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றை அடுத்தடுத்த வாரங்களில் விரிவாகக் காண்போம்.

> **இஸ்லாம், கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி, தமிழ்நாடு அரசு பல்வேறு மதத்தினரும் தங்களது புனித தலங்களுக்கு ஆன்மிகப் பயணம் மேற்கொள்ளும் வகையில், பல்வேறு நிதியுதவித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.**

...நீளும்

## மறுபதிப்பில் திராவிட இயக்க வேர்கள், தூண்கள்!

திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு எழுதியுள்ள திராவிட இயக்க வேர்கள், திராவிட இயக்கத் தூண்கள் ஆகிய இரண்டு மிக முக்கிய நூல்கள் சென்னை புத்தகக் காட்சியை ஒட்டி, மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளன. டாக்டர் நடேசனார், சர் பிட்டி தியாகராயர், டி.எம்.நாயர், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பனகல் அரசர், பி.டி.இராசன், பட்டுக்கோட்டை அழகிரி உள்ளிட்ட 35 தலைவர்களைப் பற்றிய கட்டுரைகள் ‘திராவிட இயக்க வேர்கள்’ நூலில், 440 பக்கங்களில் விவரித்துச் சொல்லப்பட்டுள்ளன. அதேபோல முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் க.அன்பழகன், நாவலர் நெடுஞ்செழியன், கே.ஏ.மதியழகன், என்.வி.நடராசன், புலவர் குழந்தை, கா.அப்பாதுரையார், தேவநேயப் பாவாணர், அண்ணல் தங்கோ, ஏ.வி.பி.ஆசைத்தம்பி, அன்னை நாகம்மையார், அன்னை மணியம்மையார் உள்ளிட்ட 36 தலைவர்களைப் பற்றிய கட்டுரைகள் 512 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளன.




திராவிட இயக்கத்தின் தோற்றம் முதல் வளர்ச்சி வரையிலான வரலாற்றை, இத்தலைவர்களின் அரசியல் செயல்பாடுகள் மூலம் கடத்துகிற ஆவணமாக இரு நூல்களும் திகழ்கின்றன. திராவிட இயக்க முன்னோடிகளின் கொள்கை அறிவு, இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகள், அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்த கொள்கை, கடந்து வந்த பாதை ஆகியவற்றைப் பற்றிய வரலாற்றுப் பதிவாகத் திகழும் இரு நூல்களும் திராவிட இயக்க இளைஞர்களும், திராவிட இயக்கத்தைப் பற்றிய ஆய்வுகளில் ஈடுபடுவோரும் அவசியம் படித்திருக்க வேண்டியவையாகும்.

சென்னை புத்தகக் காட்சியில் அரங்கு எண்:640-இல் இடம்பெற்றுள்ள பெரிகாம் பதிப்பகத்தில் இரு நூல்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. ரூ.1,200 மதிப்புள்ள இரு நுல்களும் சலுகை விலையில் ரூ.1,000-க்கு வழங்கப்படுகிறது.

நூலைப் பெற 98410-97078 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## ஃப்ளாஷ்பேக்



### மறக்க முடியாத மகிழ்ச்சி!



கோ.ராஜ்குமார்

2018-ஆம் ஆண்டு, இன்றைய கழக தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து, வாழ்த்துப் பெற்றேன். அப்போது வார்டு இளைஞர் அணி அமைப்பாளராகச் செயல்பட்டு வந்தேன். என்னுடன் என் அப்பா மற்றும் அண்ணன் ஆகியோரும் வருகை தந்து தலைவரை சந்தித்த அந்தத் தருணம், மறக்க முடியாத மகிழ்ச்சி அளித்தது.

**- கோ.ராஜ்குமார், சமுக வலைதள அமைப்பாளர், தகவல் தொழில்நுட்ப அணி, திருப்பத்தூர் நகரம், திருப்பத்தூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### நமது இலட்சியம் சாமானியமானது அல்ல!

1958-ஆம் ஆண்டு, மே 10 மற்றும் 11 தேதிகளில், திருவாரூரில் நடைபெற்ற தஞ்சை மாவட்டக் கழக 3-வது மாநாட்டில் பேரறிஞர் அண்ணா சிறப்புரையாற்றினார். “நாம் சாமானியர்களாக இருக்கலாம். ஆனால், நாம் எடுத்துக்கொண்ட இலட்சியம் சாமானியமானது அல்ல. பூகோளத்தை நாம் குறைவாக அறிந்திருக்கலாம். ஆனால், நாம் காட்டுகின்ற பாதை, தீட்டுகின்ற திட்டம் பூகோள பாடத்துக்கு அப்பாற்பட்டது அல்ல!” என அவரது உரை மிகுந்த எழுச்சியை உருவாக்கியது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.